**சுரண்டப்படும் மண் வளம்: வேளாண் துறை எச்சரிக்கை**

First Published : 21 Jun 2011 03:09:01 AM IST



கடலூர் அருகே கன்னாரப்பேட்டை ஒப்ஷதகிரி மலைப் பகுதியில், அபரிமிதமாக சரளைக் கற்கள் வெட்டி எடுக்கப்பட்டதால், சாய்ந்து விழும் அபாயத்தில் உயர் அழுத்த மின் கம

கடலூர்,ஜூன் 20: கடலூர் வட்டாரத்தில் உள்ள சரளைக் கல் குவாரிகளில், அளவுக்கு அதிகமாக சரளைக் கற்கள் (செம்மண்) வெட்டி எடுத்து சுரண்டப்படுகிறது. 10 லட்சம் ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த இந்த மண், அபரிமிதமாகச் சுரண்டப்படுவதால், வேளாண்மைக்கும் சுற்றுச் சூழலுக்கும் பெரும் அபாயம் ஏற்படும் என்று, கடலூர் மாவட்ட வேளாண்மை துறை எச்சரிக்கை விடுத்து உள்ளது.

ஆர்.எஸ்.வி.ஒய். திட்டத்தில், கடலூர் வட்டார மண் வளம் மற்றும் பயன்பாடுகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்குமாறு கோரப் பட்டது. தமிழ்நாடு வேளாண்மைத்துறை, வேளாண் பொறியியல் துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், பெங்களூர் தேசிய மண் வகையீடு மற்றும் நிலப் பயன்பாடு நிறுவனம் ஆகியவை இணைந்து கடந்த 2 ஆண்டுகளாக ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளது. 265 பக்கங்கள் கொண்ட இந்த ஆய்வு அறிக்கையை, மாவட்ட ஆட்சியர் கடந்த 17-ம் தேதி மாவட்ட விவசாயிகள் கூட்டத்தில் வெளியிட்டார்.

இந்த ஆய்வறிக்கை வேளாண் துறைக்கு மட்டுமல்லாது, மாவட்டத்தில் உள்ள பிற துறைகளான ஊரக வளர்ச்சித் துறை, புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சுற்றுச்சூழல் பாதுகாப்புத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியில் துறை, நில அளவைத்துறை ஆகியவற்றுக்கும் வழிகாட்டியாகவும், எதிர்காலத் திட்டமிடலுக்கும், இயற்கை வளங்களை முறையாக பயன்படுத்துவதற்கும் உறுதுணையாக இருக்கும் என்றும் அறிக்கை தெரிவிக்கிறது.

கடலூர் வட்டாரத்தில் 25,647 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள நிலங்களில் 454 இடங்களில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வுக் கூடங்களில் பரிசோதிக்கப்பட்டன. அவ்வறிக்கையின்படி கடலூர் வட்டாரத்தில் புதிதாக 14 மண் தொடர் வகைகள் கண்டறியப்பட்டு உள்ளன.

கடலூர் வட்டாரக் கிராமங்களில் உள்ள மண் தொடர்கள் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றின் வேதியல் பண்புகளை ஆராய்ந்து, எந்தெந்த பயிர்களை சாகுபடி செய்யலாம் என்பது குறித்து, விவசாயிகளுக்குப் பரிந்துரைகளை அளித்துள்ளது ஆய்வறிக்கை. மேலும் கடலூர் வட்டார மண் வளம் குறித்த தகவல் தொகுப்பும் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. பாசன நீர் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, விவசாயிகளுக்குத் தேவையான பரிந்துரைகளும் அளிக்கப்பட்டு உள்ளன.

கடலூர் வட்டாரத்தில் 4 மிக முக்கிய பிரச்சினைகளை ஆய்வறிக்கை சுட்டிக் காட்டி உள்ளது. மேல் மண் பெருமளவுக்கு அடித்துச் செல்லப்படுதல், குவாரிகள் மூலம் அளவுக்கு அதிகமான மண் வெட்டி எடுக்கப்படுவது, ஆற்றுப் படுகைகளில் களர் தன்மை அதிகரித்து வருவது, வேளாண் நிலங்களை மாற்று உபயோகத்துக்கு அதிக அளவில் பயன்படுத்துவது என்பவற்றை முக்கிய பிரச்னைகளாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டி உள்ளது.

கடலூர் வட்டாரத்தில் குறிப்பாக ஒப்ஷதகிரி மலையில் (கேப்பர் மலை) காணப்படும் செம்மண், 10 லட்சம் ஆண்டுகளுக்குமேல் பழைமை வாய்ந்தது. இந்த இயற்கை வளம் அபரிமிதமாக வெட்டிச் சுரண்டப்பட்டு, சொற்பக் கிரயத்துக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் வேளாண்மையும் சுற்றுச் சூழலும் வெகுவாகப் பாதிக்கப்படும் என்றும் ஆய்வறிக்கை சுட்டிக்காட்டி உள்ளது. எனவே இந்தவகை மண் சுரண்டப்படுதற்கு, கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என்றும் ஆய்வறிக்கை பரிந்துரைக்கிறது.

ஒப்ஷதகிரி மலையில் உள்ள தனியார் குவாரிகளில் இருந்து நாளொன்றுக்கு 400 லாரிகளுக்கு மேல் சரளைக் கற்கள் வெட்டி எடுக்கப்பட்டு கடலூர் மாவட்டம் முழுவதும் புதுவை மாநிலத்துக்கும் கொண்டு செல்லப் படுகின்றன. இதனால் கடலூரில் சுற்றுச்சூழல் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகிறது. நகரில் போக்குவரத்து நெரிசலும், விபத்துகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதுகுறித்து சுரங்கத்துறை உதவி இயக்குநர் முருகானந்தத்திடம் கேட்டதற்கு, சாலைகள் அமைக்க சரளைக் கற்களுக்கு, இதைவிட்டால் வேறு வழியில்லையே. பள்ளிகள் இப்போதுதான திறந்து இருக்கும் நிலையில், போக்குவரத்துக் காரணங்களுக்காவும், குவாரிககளில் செயல்பாடுகளை முறைப்படுத்தவும், சரளைக் கற்கள் எடுப்பதை தற்காலிகமாக நிறுத்து வைத்து இருக்கிறோம். விரைவில் அனுமதி வழங்குவோம் என்றார்.

**பால் உற்பத்தியும் சவால்களும்**

அ. சந்திரசேகர்

First Published : 21 Jun 2011 03:12:57 AM IST

உலக அளவில் பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தை வகிக்கிறது என்று நாம் பெருமைப்பட்டுக் கொண்டாலும் பாலை அடிப்படையாகக் கொண்ட பல அளவீடுகளிலும் நாம் பின்தங்கியுள்ளோம் என்பதே உண்மை.

இந்தியாவின் இப்போதைய ஆண்டு பால் உற்பத்தி 120 மில்லியன் மெட்ரிக் டன் ஆகும். இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் பரிந்துரைப்படி ஆரோக்கிய நல வாழ்வுக்கு நபர் ஒருவர் தினமும் குறைந்தது 280 கிராம் பாலை உணவாகக் கொள்ள வேண்டும்.

இப்போதைய நம் தனி நபர் பயன்பாடு 263 கிராம் மட்டுமே. சர்வதேச அளவு சராசரி 279 கிராம் ஆகும். நம் உள்ளூர் தேவையையே நம்மால் இன்னமும் பூர்த்திசெய்ய இயலவில்லை. அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் இப்போதைய பால் உற்பத்தியை இரு மடங்காக உயர்த்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இல்லையெனில், வெளிநாட்டிலிருந்து பாலை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுவோம்.

கடந்த ஆண்டு, அமெரிக்க அதிபர் ஒபாமாவின் இந்திய வருகையின்போது கையெழுத்தாக இருந்த அமெரிக்கா பால் பொருள்களின் இறக்குமதிக்கு நம்மூர் ஆச்சாரங்களை மேற்கோள் காட்டி மத்திய அரசு தடை விதித்துள்ளது. காரணம், அமெரிக்காவில் விலங்கு கழிவுகளைக் கறவை மாடுகளுக்குத் தீவனமாக அளித்து பால் உற்பத்தி செய்கின்றனர் என்ற வாதமாகும்.

நம்மூர் பால் உற்பத்திக்கு வைரஸ், பாக்டீரியாக்கள் போன்ற கிருமிகள் மாபெரும் அச்சுறுத்தலாகும். 10,000 லிட்டர் பால் உற்பத்தியை 1,000 லிட்டருக்குக் குறைத்துவிடும் வல்லமை கோமாரி வைரஸ்களுக்கு உண்டு.

மேலை நாட்டு பால் பொருள்களை இறக்குமதி செய்யும்போது தரக்கட்டுப்பாட்டின் தரம் குறைந்தால் இத் "தீவிரவாதி'களும் நம் நாட்டில் நுழைந்து நிரந்தரக் குடியுரிமை பெற்று நம்மூர் பால் வளத்தின் கட்டமைப்புக்கே சவால் ஏற்படுத்தி விடுவார்கள் என்பதே உண்மை. இதே காரணத்தைக் கூறியே இன்னும் நம்மூர் கால்நடைப் பொருள்களுக்கு மேலைநாடுகள் தடை ஏற்படுத்தி வருகின்றன.

நம் நாட்டின் மொத்த உள்நாட்டு பொருள் மதிப்பில் 25 சதவீதம் வேளாண் மற்றும் அதுசார்ந்த துறைகளின் பங்களிப்பாகும். நம் நாட்டின் மொத்த உள்நாட்டு பொருள் மதிப்பில் 6.5 சதவீதம் பங்களிப்பது பால் வளமாகும்.

பெருமைகள் பல இருந்தும் ஆச்சரியமூட்டும் தகவல்களும் உண்டு. நம் நாட்டின் பால் உற்பத்தியில் பாதிக்கும் மேல் எருமைப் பாலாகும். சராசரி கணக்கை ஆராய்ந்தால் கலப்பினப் பசுக்கள் தினமும் சராசரி 3.91 கிலோ பாலையே வழங்குகின்றன. நம்முடைய பால் உற்பத்தி "தொழில்' அடிப்படையில் அமைந்தது அல்ல. இருப்பினும், 70,000-க்கும் அதிகமான பால் குளிரூட்டும் நிலையங்கள் 85,000-க்கும் அதிகமான கூட்டுறவு பால் சங்கங்கள் உள்ளன. ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் வழியே வெறும் 14 சதவீதம் பாலே கையாளப்படுகிறது.

பால் உற்பத்தித் துறைக்கு ஓர் உபதொழிலின் அந்தஸ்தே நம்நாட்டில் வழங்கப்படுகிறது. குறிப்பாக, விவசாயத் தொழிலாளர்களும் சிறு, குறுவிவசாயிகளும் நிலமற்றவர்களுமே இத்துறையில் நிறைந்துள்ளனர். கால்நடைகளிலிருந்து கிடைக்கும் தொழு உரத்தை

விவசாயத்துக்கும், விவசாய உப பொருள்களை மாட்டின் தீவனமாக அளித்தும் பாலை உற்பத்தி செய்கின்றனர். எனவே, விவசாயத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் தீவனத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி பால் உற்பத்தியையும் வெகுவாகக் குறையச் செய்கிறது.

விவசாயம் மட்டுமல்ல, மேலும் பல சவால்கள் பால் உற்பத்திக்கு எதிராக உள்ளன. துண்டு, துண்டாக்கப்பட்ட விவசாய சாகுபடி நிலங்கள், விலகிச்சென்று விட்ட விவசாய முன்மாதிரிகள், தீவனப்பற்றாக்குறை இளைஞர்களின் விருப்பமின்மை, குறைந்த உற்பத்தி விலை போன்றவை பெரும்பாலான சவால்களாகும்.

கறவை மாட்டுக்கு வணிகமும், வர்த்தகமும் தெரிய வாய்ப்பில்லை. புல்லை, பாலாக்கினோமா என்பதோடு சரி. அந்த வைக்கோல் புல் தீவனத்தின் பற்றாக்குறை இன்று 30 சதவீதம் என பல அறிக்கைகள் கூறுகின்றன. அதாவது மாட்டின் வயிற்றில் மூன்றில் இரண்டு பங்குதான் நிறைகிறது.

இதனால் கலப்பினப் பசுக்களிலிருந்து முழு அளவு பால் உற்பத்தியை நம்மால் பெற முடியவில்லை. மீதமுள்ள 1 பங்கும் நிறைந்துவிட்டால் அது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில்கூட சலனங்களை ஏற்படுத்தும் என விவசாயப் பொருளாதார வல்லுநர்கள் கூறுகையில், அந்த 30 சதவீத தீவனப் பற்றாக்குறையை எவ்வாறு நிவர்த்தி செய்வது?

பால் உற்பத்தி மாவட்ட, மாநில, நாடுகள் அளவில் சமச்சீரற்று வேறுபட்டுக் காணப்படுகிறது. தென்மாநிலங்களில் கேரளம் மிகவும் மோசமான பால் தட்டுப்பாட்டைச் சந்தித்து வருகிறது. குஜராத் மற்றும் கர்நாடகா மாநிலங்கள் பால் உற்பத்தியில் சிறந்து விளங்குகின்றன.

தமிழகப் பால் உற்பத்தியாளர்களின் போராட்டத்தால் மிகவும் பாதிக்கப்பட்டது கேரள கூட்டுறவு பால் விநியோக அமைப்பான "மில்மா'வாகும்.

பால் உற்பத்தியில் உலகில் முதல் இடத்தை நாம் அடைந்தும் பால் பொருள்கள் ஏற்றுமதியில் நம் பங்கு மிகவும் துச்சமாகும். ""சார்க் நாடுகளுக்கே நம் பால் பொருள்கள் ஏற்றுமதியாகின்றன. சர்வதேச அளவில் கால்நடைப் பொருள்களின் உற்பத்தி, பதப்படுத்துதல், ஏற்றுமதி போன்ற துறைகளில் வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. அதற்கு சர்வதேசத் தரத்தை நம்முடைய பால் பொருள்கள் பெற்றுள்ளன என உறுதிப்படுத்துவது நம்முடைய கடமையாகும்.

உலகம் முழுவதும் உற்பத்தியாகிற பாலில் 7 சதவீதமே சர்வதேச சந்தைக்கு வருகிறது. இதில் பெரும் பங்கும் உள்நாட்டுச் சந்தை மற்றும் மக்கள்தொகை குறைந்த நாடுகளான நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, ஐரோப்பிய குழுமம் போன்ற நாடுகளில் இருந்து வருகிறது. 2008 முதல் அமெரிக்கா மற்றும் ஆர்ஜென்டீனா நுழைந்தது. இந்தியா 1990 முதல் சர்வதேச பால் வணிகத்தில் தன்னை நுழைத்துக்கொண்டாலும், எவரையும் தன் பக்கம் திருப்பும்நிலையில் இல்லை.

நம் நாட்டில் உற்பத்தியாகும் 99 சதவீதம் பாலும் உள்நாட்டுச் சந்தையிலேயே விற்கப்பட்டுவிடுவதால் சர்வதேச வணிகத்தைப் பற்றி நாம் கவலைப்படுவதில்லை. எனவே,

சர்வதேச பால் வணிகத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் நம் ஊரில் எவ்வித சலனத்தையும் ஏற்படுத்துவது இல்லை.

இன்று நாட்டின் உணவுப் பாதுகாப்பில் பால் மிக முக்கியமான அங்கமாகும். நம்நாட்டில் உணவுக்காக அன்றாடம் செலவிடும் 100 ரூபாயில் 31 ரூபாய் தானியங்களுக்கும், 16 ரூபாய் பால் மற்றும் பால் பொருள்களுக்குமே செலவிடப்படுகிறது.

இதுவே அன்றாட வாழ்வில் சராசரி குடும்பங்களில் உணவுப் பழக்கவழக்கங்களிலும் வீட்டுப் பொருளாதாரத்திலும் பாலின் முக்கியத்துவத்தை உணர்த்தும். இனியும் வேளாண் உற்பத்தி பொருள் என்ற அளவில் மூக்கணாங்கயிரிட்டு அடக்குவது என்பது பால் வளத்துறையின் வளர்ச்சியையே அடக்குவதற்கு ஒப்பாகும்.

இது ஏற்கெனவே புரதப் பற்றாக்குறையால் சிக்கி நோய்வாய்ப்பட்டிருக்கும், இந்தியத் தலைமுறையை உடல் ரீதியாகவும், ஆரோக்கிய ரீதியாகவும், மேலும் பலவீனப்படுத்தவே வழிவகுக்கும். இதை உணர்ந்தே இன்று பல மாநிலங்களும் தங்கள் மாநில மாணவச் செல்வங்களுக்குத் தங்கள் உணவுத் திட்டத்தில் பாலையும் ஓர் உணவாக அளிக்க முன்வந்துள்ளன. தொழில்சார்ந்த அந்தஸ்துடன் அதிகப்படியான பாலை உற்பத்தி செய்தாலே தேவையைச் சரிக்கட்ட முடியும்.

பால் உற்பத்தி, பால் உற்பத்தி என மாநிலத்துக்கு மாநிலம் முழங்கினாலும் கிராமச் சூழ்நிலையே கறவை மாடு வளர்ப்புக்கு மிகவும் உகந்தது. எனவே, கிராமங்களை அடிப்படையாகவும், முன்நிறுத்தியும் பால் உற்பத்தி கொள்கைகளை வகுப்பதே நல்லது.

கறவை மாட்டைப் பராமரிப்போரில் 10-க்கு 7 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. விவசாயம் ஆண்டுக்கு 120 வேலை நாள்கள் மட்டும் அளிக்கையில் கால்நடை வளர்ப்பு 365 மனித வேலை நாள்களை வழங்குகிறது.

20,000 ரூபாயில் ஒரு கறவை மாட்டை இன்றே வாங்கி, தொழிலை ஆரம்பித்து, நாளையே வருவாய் ஈட்ட முடியும். வேண்டாம் என்னும்போது மாட்டை விற்றுத் தொழிலை எளிதாக விட்டுவிடலாம். முதலீடும் குறைவு.

மாட்டால் ஓரிடமும் நகர முடியவில்லை என்போருக்கு மேலும் பலரை இணைத்து சுயஉதவிக் குழுக்களாக கூட்டுறவு அடிப்படையில், பெரிய அளவிலான பால்பண்ணைத் தொழிலை அமைத்து நடத்தலாம். அவரவர் விருப்பத்துக்கு ஏற்ற தொழிலை இப்பண்ணையில் செய்யலாம்.

ஒருவர் தீவனப்புல் சாகுபடியோ, இன்னொருவர் மாடுகளுக்குத் தீவனம் அளிப்பதையோ, மற்றொருவர் பண்ணை நிர்வாகத்தையோ, விற்பனையோ எனத் தகுதிக்கு ஏற்ப தங்கள் திறமையை வெளிக்கொண்டு வருவாய் ஈட்ட இத்தொழில் நல்ல வாய்ப்பு ஆகும்.

பல மாநிலங்களிலும், அதிகரித்து வருகிற தீவனச் செலவை காரணங்கள் காட்டியே பால் உற்பத்தியாளர்கள் கொள்முதல் விலையை கூட்டச் சொல்லி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அதிர்ச்சி என்னவென்றால், கொள்முதல் விலை அதிகரித்த பின்னாலேயே தீவனத்தின் விலையும் அதிகரித்து விடுகிறது.

இதற்கு ஒரே தீர்வு குறைந்த செலவில் கறவை மாட்டுத் தீவனம் உற்பத்தி செய்து பால் உற்பத்தியாளருக்கு அளிப்பதுதான். நம் நாட்டில் பால் கொள்முதலிலும், விற்பனையிலும் முதலிடத்தை வகிக்கிற குஜராத் மற்றும் ஆந்திரத்திலும் உள்ள பால் உற்பத்தியாளர்கள் தங்கள் மாடுகளைப் பராமரிக்கவும், பால் கறக்கவும் மட்டும் செய்தால் போதும். மாட்டுத் தீவனம், மருத்துவ வசதி, கருவூட்டல் மற்றும் பாலைக் கொள்முதல் செய்தல் போன்ற அத்தனை பணிகளும் அவர்கள் வீட்டு வாசலிலேயே நிறைவேற்றப்படுகிறது. அதற்கான வசதி வாய்ப்புகள் அங்கு உண்டு.

இதர மாநிலங்களிலும் இம்முறையைப் பின்பற்றினாலேயே நுகர்வோரின் வீட்டு வாசலில் வரும் காலங்களில் நம் நாட்டு பால் தடையின்றி கிடைக்க வழி உண்டு.

**குன்னூரில் பேரிக்காய் விளைச்சல் அமோகம்**

First Published : 20 Jun 2011 10:24:21 AM IST

குன்னூர், ஜூன் 19: குன்னூர் பகுதிகளில் பேரிக்காய் விளைச்சல் அதிகமாக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

குன்னூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு காணப்பட்ட வானிலை காரணமாக பேரிக்காய் மரங்களில் காய்கள் துளிர்விடத் துவங்கின. இப்போது நிலவும் இதமான காலநிலை காரணமாக பேரிக்காய் மரங்களில் காய்கள் அதிகளவில் காய்த்துள்ளன (படம்).

அமோக விளைச்சல் காரணமாக நடப்பாணடு அதிக வருவாய் கிடைக்கும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

**பண்ணை செயல் திட்டம் விவசாயிகள் இன்று முதல் விவரங்களை அளிக்கலாம்**

First Published : 20 Jun 2011 11:17:46 AM IST

திருச்செங்கோடு, ஜூன் 19: தமிழக வேளாண்துறையால் செயல்படுத்தப்படவுள்ள பண்ணை செயல் திட்டத்துக்கான விவரங்களை விவசாயிகள் திங்கள்கிழமை (ஜூன் 20) முதல் அளிக்கலாம்.

இதுகுறித்து பள்ளிபாளையம் வேளாண் உதவி இயக்குநர் முரளீதரன் கூறியது:

பண்ணை செயல் திட்டத்துக்காக, சிறு மற்றும் குறு விவசாயிகளிடமிருந்து, நிலத்தின் சர்வே எண், பரப்பு, பாசனப் பரப்பு, கல்வித்தகுதி, வயது, மண்ணின் தன்மை, கால்நடைகள் குறித்த விவரங்கள், வேளாண் கருவிகள் இருப்பு, பயிர் சாகுபடி நிலைமை, மகசூல், மொத்த வருமானம் போன்ற அடிப்படை விபரங்கள், கிராம அளவில் சேகரிக்கப்படும்.

இந்த விபரங்களை சிறு மற்றும் குறு விவசாயிகள் நேரிலும் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உரிய ஆவணங்களுடன் பள்ளிபாளையம் வேளாண் விரிவாக்க மையத்தில் நேரில் விவரங்களை அளிக்கலாம்.

இவ்விவரங்களைப் பயன்படுத்தி பண்ணைவாரியாக செயல் திட்டம் வகுக்கப்படும். விவசாயிகள் கடைப்பிடிக்கும் தொழில்நுட்பங்கள், பண்ணைத் தொழிலாளர்கள் நிலை, பிரச்னைகள் ஆகியவை பற்றி விரிவாக விவாதிக்கப்படும்.

இதையடுத்து பகுதி வாரியாக, பண்ணை செயல் திட்டம் வகுக்கப்படும். எனவே, இந்தக் கணக்கெடுப்புக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு விவசாயிகளுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

**தொடர்மழையால் விவசாயம் பாதிப்பு**

First Published : 20 Jun 2011 10:22:53 AM IST

கூடலூர், ஜூன் 19: நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் கூடலூர் மற்றும் பந்தலூர் பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த பாகற்காய் தோட்டங்கள் நீரில் மூழ்கி அழிந்துவிட்டன.

கூடலூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது. இதனால் பாகற்காய் தோட்டங்களில் அளவுக்கு அதிகமாக மழைநீர் தேங்கியுள்ளதாலும், காலநிலை மாற்றம் காரணமாகவும் பாகற்காய்த் தோட்டங்கள் முற்றிலும் அழிந்துவிட்டன.

**மல்லிகை நறுமண தொழில்சாலை அமைக்கக் கோரிக்கை**

First Published : 20 Jun 2011 09:09:05 AM IST

Last Updated : 20 Jun 2011 10:01:49 AM IST

திருச்சி, ஜூன் 19: திருச்சி மாவட்டம், எட்டரை, புலியூர் பகுதிகளில் மல்லிகைப் பூவிலிருந்து நறுமணம் தயாரிக்கும் தொழில்சாலை அமைக்க வேண்டும் என காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அந்தப் பிரிவின் மாநிலத் துணைத் தலைவர் புலியூர் ஏ. நாகராஜன் கூறியிருப்பது:

"ஸ்ரீரங்கம் சட்டப்பேரவைத் தொகுதிக்கு உள்பட்ட எட்டரை, போசம்பட்டி, போதாவூர், புலியூர், கோப்பு ஆகிய பகுதிகளில் அதிக அளவில் மல்லிகைப் பூ உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தி அதிக அளவில் இருப்பதால், அதற்கு நல்ல விலை கிடைக்கவில்லை. இதனால், மல்லிகை விவசாயிகள் வேதனையுடன் உள்ளனர்.

விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்னையைத் தீர்க்கும் வகையில், மல்லிகைப் பூவிலிருந்து நறுமணம் தயாரிக்கும் தொழில்சாலையைப் புலியூரில் அமைக்க வேண்டும் என நீண்ட காலமாக

வலியுறுத்தி வந்தனர். எனவே, புலியூர் பகுதியில் மல்லிகைப் பூவிலிருந்து நறுமணம் தயாரிக்கும் தொழில்சாலையை அமைக்க தமிழக முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார் நாகராஜன்.

**தொல்லையில் தேயிலை விவசாயிகள்!**

First Published : 20 Jun 2011 10:24:10 AM IST

உதகை, ஜூன் 19: நீலகிரி மாவட்டத்திலுள்ள தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் கோட்டா முறை தொடர்ந்து அமலில் இருப்பதால் பசுந்தேயிலை விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 65 ஆயிரம் சிறு மற்றும் குறு விவசாயிகள் தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். இந் நிலையில் நீலகிரி மாவட்டத்தில் கடந்த 2 மாதங்களாக பரவலாக பெய்த மழையையடுத்து தேயிலை மகசூலும் அதிகரித்துள்ளது. ஆனால், விளையும் பசுந்தேயிலை முழுவதும் பறிக்கப்படாமல் கோட்டா முறையால் வீணாகிறது.

கோட்டா முறை என்பது, தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக இருப்பவர்களிடம் எத்தனை கிலோ பசுந்தேயிலை கொள்முதல் செய்ய முடியுமென்பதை ஏற்கெனவே தெரிவித்து விடுவதாகும். ஒரு விவசாயியின் தோட்டத்தில் 50 கிலோ பசுந்தேயிலை விளைந்தால், கோட்டா முறைப்படி அவரிடம் 20 கிலோ மட்டுமே பெற முடியுமென்றால் மீதமுள்ள 30 கிலோ பசுந்தேயிலை பறிக்கப்படாமலேயே வீணாகிவிடும்.

விளைச்சல் அதிகரித்துள்ள தற்போதைய சூழலில் பசுந்தேயிலையை கொள்முதல் செய்யும் அரசு தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளும், தனியார் பாட்லீப் தொழிற்சாலைகளும் பல்வேறு காரணங்களைக் கூறி கொள்முதலை கட்டுப்படுத்தி விடுகின்றனர். மாவட்டத்தில், இத்தலார் பகுதியிலுள்ள தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையில் கடந்த 2 ஆண்டுகளாகவே இத்தகைய நடைமுறை இருப்பதால் இத்தலார் மற்றும் சுற்றுப் பகுதிகளிலுள்ள தேயிலை விவசாயிகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகள் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் அதிகளவில் உறுப்பினர்களாக இல்லாததால் தனியார் தேயிலைத் தொழிற்சாலைகளையும், தனியார் தேயிலை கொள்முதல் ஏஜெண்டுகளையுமே நம்பி இருக்கின்றனர்.

ஆனால், கோட்டா முறை காரணமாக தனியார் தேயிலைத் தொழிற்சாலைகளும், தேயிலை ஏஜெண்டுகளும் பசுந்தேயிலை கொள்முதலை நிறுத்தியுள்ளனர். அத்துடன், தேயிலை விவசாயிகள் விநியோகித்த பசுந்தேயிலைக்கு உரிய பணத்தை முழுமையாக கொடுக்காமலிருப்பதால் தேயிலை விவசாயிகள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப் பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென நீலகிரி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி பொதுசெயலர் ஆர்.ரவிக்குமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் புத்தி சந்திரனுக்கு அவர் அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தொழிற்சாலைகளில் நிலவும் கோட்டா முறையால் தேயிலை விவசாயிகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் உரிய காலத்தில் பசுந்தேயிலையை விநியோகித்து தரமான தேயிலைத்தூளை உற்பத்தி செய்ய முடியாததால் நீலகிரி தேயிலையின் தரம் பாதிக்கப்படும் அபாயமேற்பட்டுள்ளது.

நீலகிரி தேயிலைத் தரத்தில் பாதிப்பு ஏற்பட்டால் அதை நிவர்த்தி செய்வதற்கும் கூடுதல் காலமாகும்.

எனவே, நீலகிரி மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார சீரகேட்டை தடுக்கும் வகையில், தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து பசுந்தேயிலை விவசாயிகள் உற்பத்தி செய்யும் தேயிலை முழுவதையுமே கொள்முதல் செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

அடுத்த சில மாதங்களும் மழைக்காலமே என்பதால் பசுந்தேயிலை விளைச்சல் மேலும் அதிகரிக்கும். எனவே, இப் பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்பதே நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு மற்றும் குறு தேயிலை விவசாயிகளின் பிரதான கோரிக்கையாகும்.

**வாழைப் பயிரைத் தாக்கும் குருத்து நோய்**

First Published : 20 Jun 2011 08:15:56 AM IST

Last Updated : 20 Jun 2011 09:20:09 AM IST

திண்டுக்கல், ஜூன் 19: வாழைப் பயிரை குருத்து நோய் தாக்கி வருவதால் பயிரிட்டுள்ள விவசாயிகள் செய்வதறியாமல் திணறி வருகின்றனர்.

நோயிலிருந்து பயிரைக் காக்கும் முறையினை தோட்டக் கலைத்துறை மேற்கொள்ள வேண்டும் என வாழை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் நல்லமநாயக்கன்பட்டி, பாலமரத்துப்பட்டி, அழகர்நாயக்கன் பட்டி, அரசனம்பட்டி, நொச்சியோடைபட்டி, தங்க சமுத்திரபட்டி என பெரும்பாலான இடங்களில் ரஸ்தாளி வாழை பயிரிடப்பட்டுள்ளது.

தற்போது இந்தப் பயிரினை மஞ்சள் நோய் எனும் குருத்து நோய் தாக்கி வருவதால், வாழைத் தோட்டம் வீணாகி வருகிறது.

நோய்த் தாக்குதலில் இருந்து பயிரினைக் காக்க, தோட்டக் கலைத்துறை முன்வர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து இப்பகுதியில் 2 ஏக்கர் அளவில் வாழை பயிரிட்டுள்ள விவசாயி சேசுராஜ் கூறியது:

சிறுமலை மலையடிவாரத்தில் உள்ள இப்பகுதிகளில் ரஸ்தாளி வாழை பெருமளவு பயிரிடப்பட்டுள்ளது.

மலையிலிருந்து மூலிகைக் காற்று வீச்சின் காரணமாக, இப்பகுதியில் பயிரிடப்பட்டு வரும் ரஸ்தாளி வாழைக்கு தனிச் சிறப்பு உண்டு. அதாவது, இத்தகைய வாழைப் பழத்தின் தோல் எளிதில் கருப்பு நிறத்திற்கு மாறாமல் இருப்பதுதான் அந்த சிறப்பு.

2 ஏக்கர் பரப்பில் இந்த வாழையைப் பயிரிட ரூ.1 லட்சம் வரை செலவு செய்யப்பட்டுள்ளது. வாழை நன்றாக விளைந்த பின்னர் செலவு போக ரூ.2 லட்சம் வரை லாபம் கிடைக்கும்.

ஆனால், தற்போது இலைகளை கருக்கி, தண்டுகளை வளரவிடாமல், குலை தள்ளுவதைத் தடுக்கும் வகையில், மஞ்சள் நோய் எனும் குருத்து நோய் வாழைப் பயிரைத் தாக்கியுள்ளதால், குலை தள்ளாமலேயே வாழைகள் வீணாகி வருகின்றன.

நோய்த் தாக்குதலை சமாளிக்கும் வகையினை, தோட்டக்கலைத் துறையினர் மேற்கொள்ள வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கையாகும்.

**பயன் தருமா பயிர்க் காப்பீடு திட்டம்?**

First Published : 20 Jun 2011 12:18:31 PM IST

கடலூர், ஜூன் 19: மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான, தேசிய வேளாண் காப்பீடு நிறுவனம் மூலம் ஆண்டுதோறும் பயிர்க் காப்பீடு செய்யப் படுகிறது.

ஆனால் காப்பீட்டுத் திட்டத்தின் பயன் முழுமையாக விவசாயிக்குக் கிடைப்பது இல்லை. வாகனங்களுக்கு காப்பீடு செய்தால், சேதம் உள்ளிட்ட பாதிப்புகளுக்கு முழுமையாக இழப்பீடு கிடைக்கிறது. ஆனால் வேளாண் பயிர்க் காப்பீடுத் திட்டத்தில், விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு, உண்மையான, முழுமையான இழப்பீடு கிடைப்பதில்லை என்கிறார்கள் விவசாயிகள்.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேதம், பிர்கா அளவில் கணக்கிடப் படுகிறது. சம்பா நெல் மகசூல் பாதிப்பு குறித்து கணக்கிடும் முறை மிகவும் வித்தியாசமானது. ஒரு பிர்காவில் சுமார் 40 கிராமங்கள் இடம் பெற்று இருந்தால், அக்கிராமங்களில் 15 இடங்களில் தலா 1 மீட்டர் ல 1 மீட்டர் அளவில் பயிர்களை வெட்டி எடுத்து, மகசூல் இழப்பு எவ்வளவு என்று கணக்கிடுகிறார்கள்.

விவசாயிகள் தெரிவிக்கும் எல்லா வயல்களிலும் இந்த ஆய்வை அதிகாரிகள் மேற்கொள்ள முடியாது. எந்தெந்த வயல்களில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்பதை, தில்லியில் உள்ள வேளாண் வருவாய் ஆணையர் தான் தீர்மானிக்கிறார்.

சம்பா பருவத்துக்கு மட்டுமே அனைத்து விவசாயிகளும், பயிர்க் காப்பீடு செய்ய முடியும். குறுவை நெல்லுக்கு குறிப்பிட்ட பிர்காக்களில் மட்டுமே காப்பீடு செய்ய முடியும். அறிவிக்கப்படாத பிர்காக்களில், குறுவை நடவு செய்தாலோ, வாழை உள்ளிட்ட பிற பயிர்களை பயிரிட்டாலோ காப்பீடு கிடையாது.

பயிர்க் காப்பீட்டு திட்டத்தில் இழப்பீட்டை மத்திய மாநில, மாநில அரசுகள் தலா 25 சதமும், காப்பீடு நிறுவனம் 50 சதமும் வழங்குகிறது. கூட்டுறவு மற்றும் வர்த்தக வங்கிகளில் கடன் வாங்கும் விவசாயிகளுக்கு, சம்பா நெல்லுக்கு ஏக்கருக்கு பயிர் காப்பீடு பிரீமியத் தொகை, சிறு குறு விவசாயிகளுக்கு ரூ. 113. பெரிய மற்றும் கடன் பெறாத விவசாயிகளுக்கு ரூ. 130 வசூலிக்கப் படுகிறது. ஏக்கர் நெல் மகசூல் மதிப்பு ரூ. 13,024 என்ற அடிப்படையில் இந்தப் பிரீமியத் தொகை வசூலிக்கப்படுகிறது.

ஆனாலும் நெல் பயிருக்கு வங்கிகள் ஏக்கருக்கு ரூ. 10,500 மட்டுமே கடன் வழங்குவதால், இத்தொகை அடிப்படையிலிலேயே இழப்பீடு கணக்கிடப் படுகிறது.

கூடுதல் மகசூல் மதிப்பு அதிகப்பட்சம் ஏக்கருக்கு ரூ. 24 ஆயிரம் காண்பித்தும் பயிர்க்காப்பீடு பெறலாம். ஆனால் பிரீமியத் தொகை ஏக்கருக்கு ரூ. 567. இப்பிரச்னைகள் காரணமாக, கடன் பெற்ற விவசாயிகளுக்கு மட்டுமே காப்பீடு வசதி கிடைக்கிறது. பெரிய விவசாயிகள், கடன் பெறாதோர் பெரும்பாலும் காப்பீடு செய்வதில்லை.

கடந்த 2006-07ம் ஆண்டில் கடலூர் மாவட்டத்தில் பெரும் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டது. 80 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்கள் முற்றிலும் அழிந்தன. அப்போது கடலூர் மாவட்டத்தில் விவசாயிக்கு (சேத்தியாத்தோப்பு) ஏக்கருக்கு அதிகப்பட்சம் ரூ. 7,100 குறைந்தபட்சம் ரூ. 2,225 தான் (கீரப்பாளையம்) இழப்பீடு கிடைத்தது. சாதாரணமாக நெல் சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ. 16 ஆயிரம் வரை செலவிடுவதாக விவசாயிகள் கூறுகிறார்கள்.

ரூ. 10,500 கடன் வாங்கி ஏக்கருக்கு ரூ. 16 ஆயிரம் செலவு செய்த விவசாயிக்கு, முற்றிலும் பயிர் அழிய நேரிட்டால், கிடைக்கும் இழப்பீடு ரூ. 7,100 என்றால், அது உண்மையான பயிர்க் காப்பீட்டுத் திட்டமாக எப்படி இருக்க முடியும் என்கிறார்கள் விவசாயிகள்.

விவசாயிகளுக்குக் கூடுதலாக இழப்பீடு கிடைக்கும் வகையில், பிர்கா அளவில் என்றிருப்பதை மாற்றி, கிராம அளவில் கணக்கிடும் முறையைச் சோதனை அடிப்படையில் கடலூர், சிவகங்கை, நாமக்கல் மாவட்டங்களில் அமல்படுத்ததலாம் என்று, கடந்த ஆண்டு வேளாண் காப்பீடு நிறுவனம் பரிந்துரைத்தது. ஆனால் தமிழக அரசு ஏற்கவில்லை.

இதுகுறித்து கடலூர் மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், உண்மையான பயிர்க் காப்பீட்டுத் திட்டமாக இருந்தால் தனிப்பட்ட ஒவ்வொரு

விவசாயிக்கும், அனைத்துப் பயிர்களுக்கும், அனைத்து பருவத்துக்கும் பயிர்காப்பீடு திட்டம் அமுல்படுத்த வேண்டும்.
மகசூல் முழுவதையும் இழந்து நடுத்தெருவில் நிற்கும் விவசாயிக்கு, கடன் வாங்கிய தொகையில் ஒரு பகுதியை மட்டும் இழப்பீடாக அளித்தால் என்ன பயன்? குறைந்தபட்சம் கிராம அளவிலாவது இழப்பைக் கணக்கிட வேண்டும். தனி நபருக்கு ஏற்படும் பயிர் சேதத்தைக் கணக்கிட்டு இழப்பீடு வழங்க வேண்டும் என்றார்.

**சென்ற ஏப்ரல் மாதத்தில்இயற்கை எரிவாயு, உரம் உற்பத்தி சரிவு**

ஜூன் 21,2011,01:00



புதுடில்லி:சென்ற ஏப்ரல் மாதத்தில், நாட்டின் இயற்கை எரிவாயு உற்பத்தி, 9.3 சதவீதமும், உரங்கள் உற்பத்தி 1.3 சதவீதமும் சரிவை சந்தித்துள்ளன. 2010ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், இயற்கை எரிவாயு மற்றும் உரங்கள் உற்பத்தி முறையே 54.1 சதவீதம் மற்றும் 7.8 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நடப்பாண்டு ஏப்ரல் மாதத்தில், எட்டு முக்கிய துறைகளின் உற்பத்தி வளர்ச்சி விகிதம் 4.6 சதவீதமாக உள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே மாதத்தில், 8.5 சதவீதமாக அதிகரித்து காணப்பட்டது. நிலக்கரி மற்றும் கச்சா எண்ணெய் தயாரிப்பு துறைகளின் உற்பத்தி வளர்ச்சி முறையே 2.8 சதவீதம் மற்றும் 11 சதவீதமாக உள்ளது.சென்ற ஏப்ரல் மாதத்தில், பெட்ரோலிய சுத்திகரிப்பு துறையின் வளர்ச்சி,6.6 சதவீதமாக வளர்ச்சி கண்டுள்ளது. இது, கடந்த ஆண்டு ஏப்ரலில்,5.3 சதவீதமாக குறைந்திருந்தது.

இதே மாதங்களில், உருக்கு துறை நிறுவனங்களின் வளர்ச்சி,12.9 சதவீதத்திலிருந்து, 4.8 சதவீதமாக குறைந்துள்ளது. மேலும்,மின்சார தயாரிப்பு துறை நிறுவனங்களின் வளர்ச்சி,6.9 சதவீதத்திலிருந்து, 6.8 சதவீதமாக சற்று குறைந்துள்ளது.

சென்ற ஏப்ரல் மாதத்தில், சிமென்ட் நிறுவனங்களின் உற்பத்தி வளர்ச்சி 1.1 சதவீதமாக சரிவடைந்துள்ளது. இது, கடந்த ஆண்டு இதே மாதத்தில், 6.9 சதவீதம் என்ற அளவில் அதிகரித்து காணப்பட்டது.

**மஞ்சள் வரத்து குறைந்தாலும் விலை இல்லை 700 மூட்டை மஞ்சள் ரூ.25 லட்சத்துக்கு ஏலம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2011,01:07 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடக்கும் மஞ்சள் ஏலத்துக்கு, வரத்து குறைந்த நிலையில், மஞ்சள் விலை உயர்வு இல்லாததால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். 700 மூட்டை மஞ்சள், 25 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. சேலம் மாவட்டம், ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியார்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், தனியார் கமிஷன் மண்டிகளில் சனிக்கிழமை தோறும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. கடந்த மார்ச் மாதம் துவங்கிய மஞ்சள் ஏலத்தில், மஞ்சள் குவிண்டால், 12 ஆயிரத்து, 600 ரூபாயக்கு விற்றது. அதன்பின் அடுத்தடுத்த வாரங்களில் நடந்த மஞ்சள் ஏலத்தில், குவிண்டால், 10 ஆயிரத்து, 300 ரூபாய்க்கு விற்று, விலை சரிவை நோக்கி சென்றது. தொடர்ந்து நடந்த மஞ்சள் ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால், 9, 111 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால், 7, 277 ரூபாய்க்கு விற்றது. அதன் எதிரொலியாக, மஞ்சள் வர்த்தகம் செய்ய ஒட்டுமொத்த வியாபாரிகள் முன்வராததால் ஏலம் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த 11ம் தேதி நடந்த ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால், 8, 789 ரூபாயும், உருண்டை மஞ்சள் குவிண்டால், 6, 789 ரூபாய்க்கும் விற்றது. தொடர்ந்து நடந்து வரும் மஞ்சள் ஏலத்தில், விலை சரிவை நோக்கி சென்றதால், மஞ்சள் விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைக்க துவங்கியுள்ளனர். நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்த பட்சமாக, 4, 699 ரூபாயும், அதிகபட்சமாக, 7, 699 ரூபாயும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்த பட்சமாக, 4, 877 ரூபாயும், அதிகபட்சமாக, 7,359 ரூபாயும், பனங்காலி மஞ்சள் குவிண்டால் குறைந்த பட்சமாக, 11 ஆயிரத்து, 699 ரூபாயும், அதிகபட்சமாக 14 ஆயிரத்து, 669 ரூபாய்க்கும் விற்றது.

மஞ்சள் விலை குறைந்ததால், கடந்த வாரம் நடந்த மஞ்சள் ஏலத்தை காட்டிலும் நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 1,090 ரூபாய் விலை குறைந்தும், உருண்டை மஞ்சள் குவிண்டாலுக்கு, 570 ரூபாய் விலை உயர்ந்துள்ளது. விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்த, 700 மூட்டை மஞ்சள், 25 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**கூட்டு உரம்,கலப்பு உரங்களை இடுவதால் நெற்பயிரில் அதிக மகசூல் பெறலாம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2011,00:51 IST

திருநெல்வேலி : நெற்பயிருக்கு அடியுரமாக டி.ஏ.பி.,க்கு மாற்று உரமாக, கூட்டு உரங்கள் மற்றும் கலப்பு உரங்களை இடுவதன் மூலம் அதிக மகசூல் பெறலாம். நெல்லை மாவட்டத்தில் தற்போது கார்பருவ நெல் சாகுபடிக்கான விவசாய பணிகள் நடைபெற்று வருகின்றன. கார்பருவ சாகுபடிக்கு தேவையான அம்பை-16 ரக நெல் விதைகள் மற்றும் சிங்க் சல்பேட் உரம் மானூர் வட்டார வேளாண்மை மையங்களில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. நெற்பயிருக்கு தேவையான தழை,மணி மற்றும் சாம்பல் சத்துக்களை முறையே யூரியா, சூப்பர் பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரங்களாக அடி மற்றும் மேலுரமாக இடுவது அவசியமாகும். பொதுவாக 120 நாட்கள் வரை வயதுடைய குறுகிய காலப் பயிராக இருந்தால் ஒரு ஏக்கருக்கு பொதுப்பரிந்துரையாக 20 கிலோ தழைச்சத்து, 20 கிலோ மணிச்சத்து மற்றும் 10 கிலோ சாம்பல் சத்து அளிகவல்ல 44 கிலோ யூரியா,125 கிலோ சூப்பர் பாஸ்பேட், 17 கிலோ பொட்டாஷ் உரங்களை அடியுரமாக இடவேண்டும்.

இவற்றுடன் ஏக்கருக்கு 10 கிலோ சிங்க் சல்பேட் உரத்தினை 20 கிலோ மணலுடன் கலந்து நடவுக்கு முன் வயலில் தூவ வேண்டும். தேவையான அளவு சிங்க் சல்பேட் மானூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் 50 சதவீதம் மான்யம் விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. டி.ஏ.பி.,உரம் கிடைக்கும்பட்சத்தில்,ஏக்கருக்கு தேவையான 44 கிலோ டிஏபி.,26 கிலோ யூரியா மற்றும் 17 கிலோ பொட்டாஷ் உரங்களை அடியுரமாக இடலாம். டி.ஏ.பி.,உரத்திற்கு மாற்றாக அதே அளவு சத்துக்களை கொடுக்கவல்ல கூட்டு மற்றும் கலப்பு உரங்களை அடியுரமாக இடலாம். 20:20,0:13 கூட்டு உரமாக இருந்தால், ஒரு ஏக்கருக்கு தேவையான 100 கிலோ உரத்துடன் 17 கிலோ பொட்டாஷ் உரம் கலந்து அடியுரமாக இடலாம்.

இந்த கூட்டு உரத்தில் கந்தக சத்து உள்ளதால் இது பயிரின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். கலப்பு உரம் 17:17:17 ஆக இருந்தால் 59 கிலோ கலப்பு உரத்துடன் 22 கிலோ யூரியா மற்றும் 62 கிலோ சூப்பர் பாஸ்டேட் உரங்களை கலந்து அடியுரமாக இடவேண்டும். மேற்குறிப்பிட்ட உரங்களை அடியுரமாக இடுவதுடன் 22 கிலோ யூரியாவை நடவு செய்த 15,30,45 நாட்களில் மேலுரமாக இடவேண்டும். 30வது நாள் இடும் 22 கிலோ யூரியா மேலுரத்துடன் 17 கிலோ பொட்டாஷ் உரம் கலந்து இடுவது அவசியம்.

இதுபோன்ற உரப்பரிந்துரையின்படி நடப்பு கார் பருவ நெல் பயிருக்கு உரமிட்டு அதிக மகசூல் பெறுமாறு மானூர் வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணகுமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

**சாம்பவர்வடகரை விவசாயிகளுக்கு இடைத்தரகு இல்லா வேளாண் வணிகம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2011,00:44 IST

தென்காசி : சாம்பவர்வடகரையில் விவசாயிகளுக்காக இடைத்தரகு இல்லாத வேளாண் வணிகம் துவக்கப்பட்டது. சாம்பவர்வடகரையில் விவசாய தொழிலில் விளை பொருட்களை விற்பனை செய்வதில் பெரும் இடர்பாடுகள் இருந்து வந்தது. சந்தை நிலவரங்களை அறிந்து விற்பனை செய்யும் அளவிற்கு விழிப்புணர்வு இல்லாமல், வியாபாரிகள் கேட்ட விலைக்கு வேளாண் பொருட்களை விவசாயிகள் விற்பனை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர்.

இந்நிலையை மாற்றி இடைத்தரகு இல்லாத வேளாண் வணிகம் சாம்பவர்வடகரையில் துவக்கப்பட்டது. வேளாண் வணிகத்துறை அலுவலர்களின் வழிகாட்டுதலின் பேரில் சாம்பவர்வடகரையில் எள் சாகுபடியாளர்களை ஒருங்கிணைத்து "விளைபொருள் உற்பத்தியாளர் குழு' அமைக்கப்பட்டது. இந்த குழு மூலம் இடைத்தரகு இல்லாத வணிகம் பற்றியும், தானியத்தை மதிப்பு கூட்டி விற்பனை செய்வது பற்றியும், அறுவடை பின் செய் நேர்த்தி தொழில் நுட்பங்கள் பற்றியும் பயிற்சி அளிக்கப்பட்டது. தரமான வியாபாரிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு தானியங்களுக்கு நல்ல விலை பெறப்பட்டது.

குழு நிர்வாகிகள் ராமராஜ், குத்தாலம், தங்கசாமி உள்ளிட்டோர் நல்லெண்ணெய் விற்பனை நிறுவனங்களுடன் நேரடியாக பேசினர். இதனையடுத்து எள் தானியத்திற்கு நல்ல விலையை விவசாயிகள் பெற்றனர். உள்ளூரில் ஒரு கிலோ எள் 29 ரூபாய் முதல் 32 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் ஒரு கிலோ எள் 33 ரூபாய் முதல் 36 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. இக்குழு மூலம் 5 மெட்ரிக் டன் எள் விற்பனை செய்யப்பட்டது. வேளாண் வணிக பிரிவு அலுவலர்களின் முன்னிலையில் துல்லியமான எடை போட்டு உடனடியாக பணமும் பெறப்பட்டது.

இம்முறைக்கு ஏற்பாடு செய்த வேளாண் வணிகத்துறை மாவட்ட அலுவலர் தியாகராஜன், கோட்ட அலுவலர் ராஜேந்திர கணேசன், வட்டார அலுவலர் கோமதிநாயகம் மற்றும் அலுவலர்களை விவசாயிகள் பாராட்டினர்.

**உளுந்தம் பருப்பு வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2011,01:05 IST

சேலம்: வடமாநிலங்களில் இருந்து தமிழக விற்பனைக்கு வரும் உளுந்தம் பருப்பின் வரத்து அதிகரித்துள்ளதால், மொத்த விலையில் குவிண்டாலுக்கு, 400 ரூபாய் வரை சரிவு ஏற்பட்ட போதிலும், சில்லரை விலையை வியாபாரிகள் குறைக்கவில்லை. தமிழகத்தில் இந்த ஆண்டு உழுந்து விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில் மத்தியபிரதேசம், மஹாராஷ்டிரா மாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பின் வரத்து அதிகரித்துள்ளது.சென்னை துறைமுகத்தில் பர்மா ரக உளுந்து வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சேலம் மார்க்கெட்டு, பர்மா ரக உளுந்தம் பருப்பு வரத்து வழக்கத்தை விட இருமடங்கா உயர்ந்துள்ளது.

சேலத்தில் உளுந்தம் பருப்பு, துவரம் பருப்பின் விலை தொடர்ந்து சரிவு ஏற்பட்டு வருகிறது. உளுந்தம் பருப்பின் மொத்த விலையில், குவிண்டாலுக்கு, 400 ரூபாய் வரை சரிந்துள்ளது. கடந்த வாரம் தமிழகத்தில், குவிண்டால், 7,600 ரூபாய்க்கு, விற்பனை செய்யப்பட்ட பர்மா பெருவெட்டு ரக உளுந்தம் பருப்பு, நேற்று முன்தினம் குவிண்டால், 7,200 ரூபாய்க்கு விற்பனையானது. நடுத்தர ரகம் குவிண்டால், 7,200 ரூபாய்க்க விற்பனையானது. நேற்று முன்தினம் குவிண்டால், 6,900 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

பெறுவெட்டு என்றழைக்கப்படும் மூன்றாம் ரகம் குவிண்டால், 6,500 ரூபாய்க்கு விற்றது, 6,000 ரூபாய்க்கு விற்பனையானது. ஆனால், மொத்த விலையில் உளுந்தம் பருப்பின் விலை குறைந்த போதும், சில்லரை வியாபாரிகள் விலை குறைப்பு செய்ய வில்லை. இதனால் உளுந்தம் பருப்பு கிலோ, 70 ரூபாய் முதல், 78 ரூபாய் வரை விற்பனையாகிறது. சேலத்தில் நேற்று முன்திவம் துவரம் பருப்பின் விலை, குவிண்டாலுக்கு, 100 ரூபாய் சரிந்துள்ளது. கடந்த வாரம் துவரம் பருப்பு குவிண்டால், 6,600 ரூபாய்க்கு விற்றது, நேற்று குவிண்டால், 6,500 ரூபாயாக சரிந்தது. பாசி பருப்பு குவிண்டால், 6,800 ரூபாய்க்கு விற்றது, 6,700 ரூபாயாக சரிந்துள்ளது.

மொத்த விலையில் சரிவு ஏற்பட்டுள்ள போதிலும், சில்லரை விலையில் துவரம் பருப்பு கிலோ, 70 ரூபாய்க்கும், பாசிப்பருப்பு, 72 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அனைத்து பருப்புக்களின் மொத்த விலையில், சரிவு ஏற்பட்ட நிலையில் சில்லரை விலை குறையாதது, பொது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

**பவானிசாகர் அணைக்கு நேற்று நீர்வரத்து குறைவு**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2011,01:18 IST

கோபிசெட்டிபாளையம்: பவானிசாகர் அணைக்கு நேற்று நீர்வரத்து குறைந்தது. நேற்று மாலை வினாடிக்கு 3,783 கன தண்ணீர் வரத்தானது. பவானிசாகர் அணைக்கு கேரளா மற்றும் நீலகிரி மாவட்டப் பகுதியில் இருந்து தண்ணீர் வரத்தாகிறது. கேரளா மற்றும் நீலகிரி பகுதியில் நேற்று முன்தினம் பெய்த மழை காரணமாக அணைக்கு 18 ஆயிரத்து 783 கன தண்ணீர் வரத்தானது. நேற்று முன்தினம் காலை அணையின் நீர்மட்டம் 75.65 அடியாக இருந்தது. மாலை அணையின் நீர்மட்டம் 76.65 அடியாக உயர்ந்தது. நேற்று காலை அணையின் நீர்மட்டம் 77.20 அடியாகவும், அணைக்கு தண்ணீர் வரத்து 9,086 கன அடியாகவும் இருந்தது. நேற்று மாலை இது மேலும் குறைந்து, மாலை 4 மணிக்கு அணையின் நீர்மட்டம் 77.33 அடியாகவும், தண்ணீர் வரத்து 3,783 கன அடியாகவும் இருந்தது.

**கொப்பரை உற்பத்தி பாதிப்பு விலை உயரும் வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 20,2011,21:45 IST

பொள்ளாச்சி : தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டு, விலை உயரத்துவங்கியுள்ளது. காங்கேயம் மார்க்கெட்டில் கடந்த 11ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 65 - 66.50 ரூபாய் வரை விலை கிடைத்தது. தேங்காய் பவுடர் கிலோவுக்கு 99 ரூபாயும், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,435 ரூபாயும் விலை கொடுக்கப்பட்டது. விவசாயிகள் பறித்து உரித்து இருப்பு வைத்துள்ள தேங்காய் டன்னுக்கு 18,000 - 18,500 ரூபாயும், சென்னை உள்ளிட்ட பிற பகுதிகளுக்கு உணவு தேவைக்காக அனுப்பப்படும் தேங்காய் டன்னுக்கு 17,000 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. விவசாயிகள் பறித்து இருப்பு வைத்துள்ள தேங்காய் ஒன்றுக்கு 10.75 - 11.00 ரூபாயும், வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்துக்கொள்ள தேங்காய் ஒன்றுக்கு 10.00 ரூபாய் விலை கொடுக்கப்பட்டது. கொப்பரை கிலோவுக்கு 65 - 67.25 ரூபாய் வரை விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,465 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 98 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. விவசாயிகள் சொந்த பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் டன்னுக்கு 16,500 - 17,500 ரூபாய் விலை கொடுக்கப்பட்டது.

சென்னை உள்ளிட்ட பிற பகுதிகளுக்கு உணவு தேவைக்காக அனுப்பப்படும் தேங்காய் டன்னுக்கு 16,000 ரூபாயும் விலை கொடுக்கப்பட்டது. பறித்து இருப்பு வைத்திருக்கும் தேங்காய் ஒன்றுக்கு 10.50 ரூபாயும், வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்துக்கொள்ள ஒரு தேங்காய்க்கு 9.00 - 10.00 ரூபாயும் விலை கொடுக்கப்பட்டது. கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறியதாவது: மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, கம்பம், போடி உள்ளிட்ட மாவட்டங்களில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதனால் கொப்பரை உற்பத்தி முழுமையாக தடைபட்டுள்ளது.

விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் தேங்காயை காங்கேயம், வெள்ளகோவில் பகுதிக்கு கொண்டு சென்று கொப்பரை உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனாலும், கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கொப்பரை விலை உயர்ந்து வருகிறது. ஆனால், கொப்பரை உற்பத்திக்கான போக்குவரத்து செலவு அதிகரித்துள்ளதாலும், கொப் பரை உலர்களம் வாடகை கொடுக்க வேண்டியுள்ளதாலும் தேங்காய்க்கான விலை குறைந்துள்ளது. மேலும், தேங்காய் பறிக்கும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளது. அதனால், மழை காலம் முடியும் வரையிலும் கொப்பரை விலை உயர்ந்தாலும் தேங்காய் விலை மந்தமாகவே இருக்கும் என்றனர்.

**கொப்பரை ஏலத்தில் 4 வியாபாரிகள் பங்கேற்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 20,2011,21:43 IST

ஆனைமலை : ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்தில் ஒரு கிலோ கொப்பரைக்கு அதிகபட்சமாக 63.50 ரூபாய் விலை கிடைத்தது. ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 53 பேர் 82 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்தனர். கொப்பரையை நான்கு வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) தமிழ்ச்செல்வன் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 48 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 61.10 ரூபாய் முதல் அதிகபட்சமாக 63.50 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 34 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 52.75 ரூபாய் முதல் அதிகபட்சமாக 58.00 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறுகையில், கொப்பரை விலையில் பெரிய மாற்றமில்லை. மழையின் காரணமாக வரத்து குறைந்துள்ளது. கடந்த வார விலையுடன் ஒப்பிடும் போது, முதல் தர கொப்பரையில் மாற்றம் இல்லை. இரண்டாம் தர கொப்பரை கிலோவுக்கு 55 பைசா விலை குறைந்துள்ளது என்றனர்.

**வேளாண் பயில 10 ஆயிரம் பேர் ஆர்வம் :துவங்கியது கவுன்சிலிங்**

பதிவு செய்த நாள் : ஜூன் 20,2011,21:39 IST

கோவை : கோவை வேளாண் பல்கலையில் இளங்கலை மாணவர்களுக்கான "கவுன்சிலிங்' நேற்று துவங்கியது. கோவை, தமிழ்நாடு வேளாண் பல்கலையில் இளம் அறிவியல் (பி.எஸ்சி.,) பட்டப்படிப்பில் வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல், வேளாண் இன்ஜினி யரிங், இளம் தொழில்நுட்ப பட்டப்படிப்பில் (பி.டெக்.,) உணவு பதன்பொறியியல், உயிர் தொழில்நுட்பவியல், தோட்டக்கலை, ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் இன்ஜினியரிங் உள்பட பல்வேறு பாடப்பிரிவுகள் உள்ளன. பல்கலைக்கு உட்பட்ட 11 கல்லூரிகளில் 1,300 இடங்கள் உள்ளன. மாணவர் சேர்க்கைக்கான கவுன்சிலிங்கை, பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி நேற்று துவக்கி வைத்தார். அவர் கூறியதாவது: மாணவர் சேர்க்கைக்கான கவுன்சிலிங் வரும் 24ம் தேதி வரை நடக்கிறது. தினமும் 300 பேர் வீதம் கவுன்சிலிங்கில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. விவசாய படிப்புக்கு மாணவர்களிடம் சில ஆண்டுகளாக வரவேற்பு அதிகரித்துள்ளது. இந்தாண்டில் 10 ஆயிரத்து 250 பேர் விண்ணப்பித்துள்ளனர். மாணவர்கள் 10 நாட்களுக்குள் தங்கள் ஒரிஜினல் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

"கட்- ஆப்'பில் 198.75 மதிப்பெண் பெற்ற மாணவர் அரவிந்த் ராம் உயிர் தகவலியல் துறையை தேர்ந்தெடுத்துள்ளார். முதல், 2ம் இடத்தை பிடித்த மாணவர்களுக்கு மருத்துவத்தில் எளிதாக இடம் கிடைக்கும்; இருப்பினும், விவசாயத்தை தேர்ந்தெடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. திருச்சியில் புதிதாக துவங்கவுள்ள மகளிர் தோட்டக்கலை கல்லூரி நடப்பாண்டிலேயே செயல்படும் என்பதால், தற்போதே சேர்க்கை நடக்கிறது. ஜூலை 18ம் தேதி முதல் வகுப்புகள் துவங்கும். இவ்வாறு, துணைவேந்தர் முருகேசபூபதி தெரிவித்தார். கவுன்சிலிங்கின் முதல்நாளான நேற்று ஏரா ளமான மாணவர்கள் வேளாண் படிப்பை தேர்ந்தெடுக்க விருப்பம் தெரிவித்தனர். முன்னாள் படைவீரர்களின் வாரிசுகள்- 8 பேர், விளையாட்டு வீரர்கள் 5 பேர், மாற்றுத்திறனாளிகள் 11 பேர் உட்பட 52 இடங்களுக்கான சிறப்பு கவுன்சிலிங் வரும் 8ம் தேதி நடக்கிறது.

**"பட்டுக்கூடுகள் தரத்தில் கவனம் செலுத்தினால் கூடுதல் விலை கிடைக்கும்'**

பதிவு செய்த நாள் : ஜூன் 20,2011,21:57 IST

உடுமலை : ""பட்டுக்கூடுகள் தரத்தில் உற்பத்தியாளர்கள் கவனம் செலுத்தினால், கூடுதல் விலை கிடைக்கும்,'' என மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி செல்வராஜ் பேசினார். உடுமலை அருகே சின்னவீரம்பட்டியில், தொகுப்பு வளர்ச்சி ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் வெண்பட்டு வளர்ப்பு

விழிப்புணர்வு கூட்டம் விவசாயி செல்லமுத்து புழு வளர்ப்பு மனையில் நடந்தது. பட்டு வளர்ச்சி துறை இளநிலை ஆய்வாளர் குணசேகரன் வரவேற்றார். திட்டங்கள் குறித்து உதவி ஆய்வாளர் சண்முகசுந்தரம் பேசினார். மத்திய பட்டு வாரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மைய விஞ்ஞானி செல்வராஜ் பேசியதாவது: தரமான பட்டுக்கூடுகளுக்கு சந்தையில் நல்ல விலை கிடைத்து வருகிறது. தரமான கூடுகளை உற்பத்தி செய்ய மல்பெரி இலை வளர்ப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மண் பரிசோதனை செய்து தகுந்த உரங்களை பயன்படுத்த வேண்டும். உரங்களை செடிகளின் இடைவெளியில் குழி தோண்டி போடும் முறையை மட்டுமே விவசாயிகள் பின்பற்ற வேண்டும். உயிர் உரம், பசுந்தாள் உரங்களை பயன்படுத்தினால், மல்பெரி இலையின் தரம் கூடும். செடிகளுக்கு அதிக தண்ணீர் விடும் முறையையும் தவிர்க்க வேண்டும். கரிசல் மண் நிலங்களுக்கு 11 நாள் , மணல் கலந்த குறுமண் 8 நாள்; மணல் கலந்த செம்மண் நிலங்களுக்கு 6 நாள் இடைவெளியிலும் தண்ணீர் பாய்ச்சலாம். கோடை கால புழு வளர்ப்பில் மல்பெரி இலைகள் எளிதில் வாடி விடும். இதை தவிர்க்க புழு வளர்ப்பு மனைகளில் இலைகளை வைத்தவுடன் ஜன்னல்களை மூடி விட வேண்டும். புழுக்களுக்கு இலைகளை வைத்தவுடன் மேலே மெழுகுதாள் அல்லது பேப்பர் வைத்து மூடலாம். புழுக்கள் கூடு கட்ட பயன்படுத்தப்படும் நெற்றிகா அமைப்பை முறையாக பயன்படுத்த வேண்டும். இதனால், கூடுகளின் தரம் அதிகரிக்கும். ஒரு கூட்டின் எடை 2 கிராமுக்கு அதிகமாகவும், வெறும் கூடு 0.5 கிராம் இருக்க வேண்டும். உடுமலை பகுதியில் உற்பத்தியாகும் வெண்பட்டுக்கூடுகளின் எடை சராசரியாக 0.45 என்ற அளவில் உள்ளது. நூற்பு திறன் சராசரி 22 லிருந்து 20 ஆக குறைந்துள்ளது. நூற்பு திறன் அதிகமுள்ள கூடுகளுக்கு அனைத்து சந்தைகளிலும் நல்ல விலை கிடைக்கும். எனவே உடுமலை, பொள்ளாச்சி பகுதி விவசாயிகள் உற்பத்தியில் மட்டுமல்லாது தரத்திலும் கவனம் செலுத்த வேண்டும்', இவ்வாறு பேசினார். கோவை வேளாண் பல்கலைகழகம் மற்றும் வாணவராயர் வேளாண் கல்லூரி மூன்றாம் ஆண்டு மாணவர்கள் பங்கேற்று கலந்தாய்வு நடத்தினர். வேளாண்துறை உதவி இயக்குநர்(பொறுப்பு)திருமகள்ஜோதி, கூட்டுறவு வங்கி செயலாளர் ஈஸ்வரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**காரீப் முன்பருவ பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 20,2011,21:47 IST

மானாமதுரை : மானாமதுரை அருகே ஆலம்பச்சேரியில் விவசாயிகளுக்கான காரீப் முன்பருவ பயிற்சி முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் பார்வதி தலைமை வகித்தார். விவசாய உதவி இயக்குனர் பரமேஸ்வரன், துணை விவசாய அலுவலர் நீதிபதி, உதவி விதை அலுவலர்

கென்னடி, உதவி விவசாய அலுவலர் ராஜேந்திரன், மற்றும் விவŒõயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

**கொள்முதல் அதிகரிப்பு தேயிலை விலை உயர்வு**

பதிவு செய்த நாள் 6/20/2011 11:58:51 PM



குன்னூர் : குன்னூர் தனியார் ஏல மையத்தில் (சிடிடிஏ) கடந்த வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் ஏலம் நடைபெற்றது. 16.04 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 11.08 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.96 லட்சம் கிலோவும் அடங்கும். ஏலத்தில் பாகிஸ்தான், ரஷ்யா உள்ளிட்ட வெளிநாட்டு வர்த்தகர்கள் பங்கேற்றனர். உள்நாட்டு வர்த்தகமும் களைகட்டியது.

இதனால் 89 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. எனவே அனைத்து ரகத்திற்கும் கிலோவுக்கு ரூ.3 வரை விலை உயர்ந்தது. வார விலை நிலவரப்படி, இலை ரகத்தில் சாதாரண வகைக்கு கிலோ ரூ.36 முதல் ரூ.39 வரையும், உயர் வகை ரூ.80 முதல் ரூ.135 வரையும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ.43 முதல் ரூ.47 வரையிலும், உயர் வகை ரூ.85 முதல் ரூ.135 வரையிலும் விலை போனது.

சிடிசி டஸ்ட் ரகத்திற்கு அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.151ம், ஆர்தோடக்ஸ் ரகத்திற்கு கிலோ ரூ.197ம் விலை கிடைத்தது. அடுத்த ஏலத்திற்கு 16.02 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.